# கேழ்வரகின் விலை நிலையாக இருக்கும்

இந்தியாவில் கேழ்வரகு உற்பத்தி கோதுமை, அரிசி, மக்காச்சோளம், சோளம் மற்றும் கம்புக்கு அடுத்தப்படியாக ஆறாவது இடத்தை பிடித்துள்ளது. கேழ்வரகு அதிக ஊட்டச்சத்தும், சத்துமாவு தயாரிப்பில் முக்கிய மூலப்பொருளாகவும் நீரிழிவு நோய் தடுப்பு போன்ற சிறந்த பண்புகளை பெற்றுள்ளது.

கேழ்வரகு கர்நாடகம், தமிழ்நாடு, ஆந்திரா, ஒரிசா, பீகார், குஜராத், மகாராஷ்டிரா, உத்திர பிரதேசம் மற்றும் ஹிமாச்சல் பிரதேசத்தின் மலைப்பாங்கான பகுதிகளிலும் அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது. இந்தியாவின் கேழ்வரகு உற்பத்தியில் 67 சதவீதம் கர்நாடகா, இதனை தொடர்ந்து தமிழ்நாடு 14 சதவீதம் பங்களித்து வருகின்றது.

கேழ்வரகு சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா, இலங்கை, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு ஆண்டு முழுவதிலும் ஏற்றுமதியாகிறது. 2014-15ம் ஆண்டில் 1.20 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு 1.99 மில்லியன் டன்கள் கேழ்வரகு உற்பத்தி செய்யப்பட்டது. இதன் சராசரி மகசூல் எக்டருக்கு 1.6 டன்கள் ஆகும். மேலும், தமிழ்நாட்டில் 2014-15ம் ஆண்டில் கேழ்வரகு 0.11 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு 0.30 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. (பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் இயக்குனரகம்) தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு மற்றும் வேலூர் மாவட்டங்களில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றது.

இச்சூழலில், தமிழக விவசாயிகள் அறுவடை செய்த கேழ்வரகை விற்பனை செய்ய ஏதுவாக விலை நிலவரம் பற்றி அறிந்து கொள்ள, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் கடந்த 12 வருடங்களாக திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய கேழ்வரகு விலையை ஆய்வு செய்தது.

இதனடிப்படையில், கேழ்வரகின் பண்ணை விலையானது கிலோவிற்கு ரூ.16 முதல் ரூ.18 வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனைபடி விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள</u>**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641003, தொலைபேசி- 0422-2431405


**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>**


பேராசிரியர் மற்றும் தலைவர்

சிறுதானியங்கள் துறை

தாவர இனவிருத்தி மற்றும் மரபியல் மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641003.

தொலைபேசி- 0422-2450507.